உ

சிவமயம்



# நாகம்மா நினைவு மலர்

"உற்றா ராருளரோ உயிர் கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லால்நமக்(கு)
உற்றா ராருளரோ"
திருமுறை 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

யாழ்ப்பாணம்

மூளாய்வாசரும்

திரு. மு. வல்லிபுரம் அவர்களின்

அருமைத்துணைவியார்

திருமதி நாகம்மா

அவர்களின்

# நினைவு மலர்

தொகுத்தவர்:

திரு. கா. வேல்முருகன் ஆசிரியர் B. O. L.
பண்டத்தரிப்பு.
1966

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லங்காதேவி அச்சகம்,
சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகற் கல்லா லரிது "

—: தமிழ்மறை



திருமதி நாகம்மா வல்லிபுரம்

தோற்றம்: 17-4-1906 மறைவு: 23-8-1966.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# நன்றி

எனது மாமி திருமதி நாகம்மா வல்லிபுரம் அவர்கள் மறைவு நாளின்போது, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உற்ருர், உறவினர், நண்பர்கள் ஆய பலர் நேரில் வந்தும், உரையாற்றியும், செய்திகள் அனுப்பியும் தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்திருந்தார்கள் அவர்கள் அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் எனது நன்றியறிதல் உரியதாகுக.

அன்னுரின் நினைவாக ஒரு சிறு நினைவு மலர் வெளியிட வேண்டுமென நண்பர் சிலர் விரும்பினர். அதற்கமைய இறைவன் திருவருட்டுணை கொண்டு "நாகம்மா நினைவு மலர்" என்னும் நூலை வெளியிட்டுள்ளோம். இதில் நாகம்மையாரின் வாழ்க்கை வரலாறும் அவரோடு தொடர்புடைய பல கவிதைகளும் அவரைப்பற்றிய அறிஞர்கள் உரைகளும் இடம்பெற்றுள்ளன. ஈற்றில் இறைவன் திருவடியைப் பெறுதலே மக்கட்பிறவியின் நோக்கம். ஆதலால் அவன் அருளாலே அவன் தாள் வணங்கிப் பேரின்பம் பெறவேண்டும் என்ற கருத்தோடு இறைவன் அருள் பெற்ற அடியார்களின் திருவருட் பாக்களில் ஒரு சிலவற்றையும் சேர்த்துள்ளோம். இது பலருக்குப் பயன் தரும் என்பது எங்கள் நம்பிக்கை.

இந்நூல் இவ்வடிவு பெறக் கவிதைகள் எழுதியும் தொகுத்தும் உதவிய புலவர் திரு. கா. வேல்முருகன் B.O.L. அவர்களுக்கும், தாம் நிகழ்த்திய பேச்சுக்களை உரை அமைப்பில் வடித்துத் தந்த சான்ருேர்க்கும், அச்சுப்பிழை திருத்தியுதவிய பண்டிதர் திரு க. மாயில்வாகனம் அவர்களுக்கும், அழகு பொலிய நூலை ஆக்குவதில் உழைத்த அன்பர்களுக்கும், சிறப்பாக சங்கானை ஸ்ரீ லங்காதேவி அச்சக உரிமையாளர் திரு. சி. திருநாவுக்கரசு அவர்களுக்கும் எம் உளம் கனிந்த நன்றி உரியதாக.

மூளாய்,
வட்டுக்கோட்டை.
22-9-1966

அன்புள்ள
அ. அமிர்தலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமதி வல்லிபுரம் நாகம்மா அவர்கள்
# வாழ்க்கை வரலாறு

'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று.

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என ஔவை யார் கூறிய அருள் மொழி நம் பிறவியின் பயனை உணர்த்துவ தாக அமைந்துள்ளது. மக்கட்பிறப்பை எடுப்பதிலன்றி அப்பிறப் பின் பயனை அறிந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதிற்றான் வெற்றிதங்கியுள்ளது. இவ்வெற்றிக்குரியவராய்த் திகழும் பேறு எல்லாருக்கும் கிட்டாது. இலட்சத்தில் ஒரு சிலரே இத்தகு சிறப் புப் பேற்றைப் பெற்றவர். அச்சிலருள் ஒருவராக விளங்குபவரே நம் நினைவிற்குரிய **திருமதி வல்லிபுரம் நாகம்மா** அவர்கள்.

## தோற்றமும் இளமையும்

இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்குமுன்னர் மூளாயிலே உத் தம சைவத் தலைவராம் திரு. இராமலிங்கம்பிள்ளை என்னும் பெரி யார் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்களது அருமைத் துணை வியார் திருமதி தெய்வானைப்பிள்ளை அவர்கள் பத்தாவுக்கு ஏற்ற பதிவிரதையாக ஒத்த நற்றலைவியாக இருந்தார்கள். திரு. இராம லிங்கம்பிள்ளை அவர்கள் சைவ ஆசார சீலர் மட்டுமன்றி சிறந்த சோதிடராகவும் விளங்கினார்கள். இதனால் இவ்வூர்ப்பெருங்குடி மக் கள் இவர்களிடத்துத் தனிஅன்பு பூண்டிருந்தார்கள் என்று கூறல் மிகையாகாது. சான்றோர் வழிநின்று இல்லறம் நடத்தும் நாளில் மூத்த புதல்வராக, இன்று வெலிமடையில் நாதன் ஸ்ரோ ருக்கு உரியவராக விளங்கும் திரு. நாகலிங்கம் அவர்களைப் பெற் றார்கள். இப்பராபவ ஆண்டுக்கு முன்னைப் பராபவ ஆண்டு சித் திரைத்திங்கள் 5-ம் நாள் (17-4-1906) திருவோண நட்சத்திரம் கூடிய சுபவேளையில் பெண்மகவாம் நாகம்மாவைப் பெற்றெடுத் தார்கள். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருங்காலை, 'தம்பி உள்ளார் சண்டைக் கஞ்சார்' என்ற பழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிக்கமைய இந்நாள் வெளிமடையில், இந்திராஸ்ரோருக்கு உரியவராய் விளங்கும், திரு. சின்னத்தம்பியைத் தமக்கு அரும் தம்பியாக வாய்க்க, இவர் அன்னையார், ஈன்றெடுத்தார்கள். முத்தமிழ்போல் - முக்கனிபோல இம்மூன்று உடன் பிறப்பாளரும் பெற்றோருடன் வாழுங்காலே, மிக இளமைப்பருவத்திலேயே தாய் தந்தையரை இழந்தனர். "தாயோடு அறுசுவைபோம் - தந்தையோடு கல்விபோம்" என்ற மூதாட்டி வாக்கு நாகம்மையார் வாழ்வில் பொய்க்கவில்லை. இளமைக்காலம் இவர்களுக்குச் சோதனை சூழ்ந்த காலமாகவே அமைந்திருந்தது. ஆனாலும் அண்ணனும், தம்பியும் அருந்துணையாயினர் சோதரபாசம் இம்மூவரையும் பின்னிப் பிணைத்திருந்தது. ஒன்றுபட்டு வாழும் இச்சகோதரர்பால் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற பாரதி வாக்கு நிலையான இடத்தைப் பெற்றது.

கன்னியராய் வாழுங்காலை தையற்கலையைப் பயின்றதோடு தான் கற்ற கலையை ஏனைய மகளிருக்கும் புகட்டினார்கள். அக்காலத்துச் சூழ்நிலைக்கேற்ப, தமிழ் மொழியை நன்கு கற்றும் - சமய உண்மைகளை நன்கு தெரிந்தும் விளங்கினார்கள்.

## திருமணம்

இல்லறத்தில் வாழ்ந்து, நல்லறம்புரிவதே தமிழர் தம் தனி நெறியாகும். இதனை உணர்ந்த திரு. சின்னத்தம்பி அவர்கள் அருமை அக்காவுக்குக் கடிமணம் செய்ய விரும்பினார்கள். பொன்னையும், பொருளையும் போகம் என்று கருதும் இச் சமூக அமைப்பிலே 'வாழ்வுக்குரியவள் பெண். வாழவைப்பவள் பெண். அறத்தின் உறைவிடம் பெண்; ஆக்கி அழிப்பவள் பெண்' என்ற தத்துவத்தை உணரும் மிகச்சில இளைஞர்களிலே விளங்கினார் அன்று ஒருவர். அவர்தான் குரும்பசிட்டியில் திரு முத்துக்குட்டி அவர்களுக்கு அருமைப் புதல்வனாகத் தோன்றியவரும் - பண்டாரவளையில் பெரும்பேர் வர்த்தகராக விளங்குபவருமான திரு. வல்லிபுரம் அவர்கள். வாழ்வில் குணத்தையே பெரிதாக நாடும் இயல்பும், ஈகைத்திறனும், வாய்க்கப் பெற்ற திரு வல்லிபுரம் அவர்கள் நல்லூழ் கூட்ட நங்கையர் திலகமாம் நாகம்மாவை 1929-ம் ஆண்டில் திருமணம் செய்தார்கள். திருமணத்தால் ஒருமனம் உற்ற இருவரும் யாழும் இசையும் போல் - முத்தும் ஒளியும் போல் பிரிவின்றி ஒத்த தலைவனும் தலைவியுமாக ஒருங்குகூடி இல்லறம் நடத்தி வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களைப் பெறலும் மனமகிழ் வெய்தலும்

வாழ்வில் "பொன்னுடையரேனும், புகழுடையரேனும் மற்று என்ன உடையரேனும்" பொன் போற் புதல்வர் பெருராயின் அவ்வாழ்வு நீரில்லாத் தடாகம் போலாகும். பிள்ளைகளைப் பெறுதல் அதுவும் அறிவறிந்த மக்களைப் பெறுதல் உலகில் பெறற்கரிய பேறுதம். இதனுற்றுன் வள்ளுவரும் "தம்பொருள் என்ப தம் மக்கள்" என்ருர். இவர்களது வாழ்வின் ஒளியாக தலைமகளாக மங்கையர்க்கரசி அவர்களையும் அடுத்த புதல்வியாக ஞானம்பிகையையும் பெற்ருர்கள். யோகாம்பிகை என்னும் பெண்மகவையும் பெற்ருர்களாயினும் அவர்பிறந்த ஆருண்டின் பின் இறைவன் திருவடியடைந்து விட்டார். கணேசானந்தன் எனும் ஆண்மகவையும் கிருஷ்ணவேணி என்னும் பெண்மகவையும் கோபாலச்சந்திரனை 10-12-1946 ஆம் ஆண்டிலும் பெற்ருர்கள்.

மூன்று பெண்மக்களையும், இரண்டு ஆண்மக்களையும் உடையராய் எல்லோரும் இனிது போற்ற இல்லற வாழ்வை இனிது நடாத்தி வந்தனர். பெண்மைக்கோர் பிறப்பிடமாய் வாழ்ந்த இவர் தம் அருமைப் புதல்வியரையும் - புதல்வரையும் கண்ணும் கவசமும் போற் பேணிக்காத்து வந்தனர். ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே! சான்ருேனுக்குதல் தந்தைக்குக் கடனே என்ற புறப்பாடலுக்கமைய திருவல்லிபுரம் அவர்கள் தம்பணியை வழுவாது செய்து வந்தார்கள். தம்புதல்வியரை இராமநாதன் கல்லூரியிலும், புதல்வரை யாழ்ப்பாணக் கல்லூரியிலும், விடுத்துக் கற்பித்தார்கள்.

## மருகரும் - பேரரும்

ஒரு குடும்பத்திற்கு வாய்க்கும் மருகரிலேயே அக்குடும்பச் சிறப்புத் தங்கியுள்ளது என்பது நம்மனேர் நம்பிக்கை. இவ்வெண்ணம் திருமதி நாகம்மா அவர்களிடம் இயல்பாகவே குடிகொண்டதால் மூத்தமகள் மங்கையர்க்கரசிக்கு ஏற்ற தலைவன் வரவேண்டுமென விரும்பினுர்கள். இறைவன் திருவருளால் வட்டுக்கோட்டைத் தொகுதி நாடாள்மன்ற உறுப்பினராக விளங்கும் திரு. அ. அமிர்தலிங்கமே தமக்குத் தக்க மருகர் எனத்தேர்ந்து, திருமதி மங்கையர்க்கரசிக்குத் திருமணம் செய்தார்கள். ஞானம்பிகை அவர்கள் திரு. திகம்பரலிங்கத்தையும் கிருஷ்ணவேணி அவர்கள் திரு. தங்கராசாவையும் காதல் மணம் செய்ய உடன்பாடளித்து அவ்விருவரையும் மருகராகப் பெற்ருர்கள். செல்வன் கணேசானந்தனை உயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியூட்டி தந்தையின் வழி நின்று வணிகத்தைப் பேணி வளர்க்க வழி செய்தார்கள். செல்வன் கோபாலச்சந்திரன் வித்தகச் செம்மலாக விளங்க வேண்டுமென விரும்பி கற்க விடுத்தார்கள்.

இவரது முன்னேய தவப்பயனுல் திருமதி மங்கையர்க்கரசி செல்வர்கள் காண்டீபன், பகீரதன் என்னும் இரு செல்வர்களேயும் திருமதி ஞானம்பிகை அருள்மதி என்னும் குலக்கொடியோடு, செல்வன் அன்பழகனேயும், திருமதி கிருஷ்ணவேணி செல்வன் முகுந்தனேயும் இனிய நன்மக்களாகப் பெற்றுர்கள். அரிய நற் பேரராம் இவர்கள் என்றும் மகிழ்வூட்ட 23-8-1966 இல் இறைவன் திருவடியை அடைந்தார்கள். இறைவனிடத்தில் என்றும் மாருத அன்பும், தொட்டதெல்லாம் பொன்னுக்கும் சிறப்பும், பெரியோரைப் பேணுதல், விருந்து போற்றல், ஆய அருங் குணங்களும் இவர்களே என்றும் மறவாது நம்மை நினேக்கச் செய்கின்றன. இவர்கள் வாழ்வு 'பெண்ணிற் பெருந்தக்கயாவுள' என்ற வள்ளுவர் வாய்மொழியே என்றும் நினேவூட்டிய வண்ணம் பொலிகின்றது.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

யாழ்ப்பாணம்

மூளாய் வாசரும்

பண்டாரவளைப் பெரும்போர் வர்த்தகருமான

# திரு. மு. வல்லிபுரம் அவர்களின்

அருமைத் துணைவியார்

# திருமதி நாகம்மா அம்மையார்

இறைவன் திருவடி நீழலைப் பெற்றமை குறித்துப்

# பாடிய கவிதைகள்.

## நேரிசை வெண்பா

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவுயர் நாகம்மா
தையலருக் கோர்விளக்காம் தாரணியை—மையலிடம்
என்றெண்ணி ஈசன் இணையடிகள் சேர்ந்தனளே
இன்றவர்க்கு யார்தாம் இணை.

## எழுசீர்ச் சந்த விருத்தம்

சீர்சால் பராபவ ஆவணி மாதச்
செவ்வாய் ஏழட்டமி அனுடம்
நேர்வரு கரணம் விட்டி யோகமாம்
நிலவு மகேந்திர நாளே
காருறை கயிலை மலைநா தனையே
கருது நாகம்மா நல்லாள்
பார்தனி லுற்ற வாழ்வினை ஒருவிப்
பரமன் தாள்சேர்ந்த நாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகவற்பா

திருமகள் களிநடம் புரிந்துறை மகிழ்வால்
பெரும்அலைக் கரங்களால் பேணியே வருடி
நாற்றிசை எங்கும் நலம்புரி முத்தும்
சாற்றரும் பவளமும் சாலக் குவித்திடும்
கடற்றாய் கவின்தரப் பசும்தளிர் படர்ந்து
உடல்வளம் சுரக்க உவப்புடன் இளநீர்
பருகிட உதவிப் பயன்பல நல்கும்
தென்னஞ் சோலைகள் தேவரும் கொள்ளும்
பன்னரும் முக்கனி பாரோர் உண்ண
இனிதாய் அளிக்கும் இளம்மரக் காடுகள்
பனிதாங்கும் இளநெற் பயிர்கள் உயர்ந்த
மஞ்சுறை மலைகள் மயிலாடு சோலைகள்
பஞ்சம் நீக்கும் பல்லாறு குளங்கள்
எத்தனை எத்தனை அழகுகள் உண்டோ,
அத்தனை அத்தனை யாவையும் ஒன்றாய்த்
தன்பாற் பொதுளிய தமிழ்சேர் ஈழ
நன்னா டதனின் நலம்பொலி சிரசாம்
நாவலன் தோன்றிய யாழ்நகர் மேல்பால்
மூளாய்ப் பதியில் முக்கண் இறைவன்
எம்பெரு மானின் இணையடி ஏத்தி,
அம்மையே அப்பா என்றழு துமையாள்
ஞானப் பாலை நயந்தே உண்ட
ஞானசம் பந்தனும் நாவுக் கரசனும்
மறைபொதிந் திருந்த அறையின் கதவுகள்
மூடவும் திறக்கவும் பாடிய அற்புதத்
திருமறைக் காட்டினில் திருவுயர் குடியினில்
வருமொரு தோன்றல் வாய்மையின் உறையுள்
சோதிடன் ஆசான் ஒழுக்க சீலன்
ஆதி நாயகன் அன்புமிக் குடையோன்
இராம லிங்கம் எனும்பேர் ஐயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறம் நடாத்த இறைவன் அருளால்
நல்லபேர் அறிஞர் நயந்து கூறும்
கோட்டைக் காட்டில் குவலயம் போற்றும்
தெய்வானைப் பிள்ளையாம் திருமகள் தன்னை
ஐயர் முன்பு அங்கி சான்ருகக்

கைக்கொண் டொழுகிக் காசினி வாழ்த்த
வைதீக நெறியில் வாழும் நாளில்,
இந்நாள் வெலிமடை நகரில் இலங்கும்
''நாதன் 'ஸ்ரோரை'' நன்கு நடாத்தும்
நாக லிங்க நம்பி யுடனே

இந்திரா 'ஸ்ரோருக்' குரியோ னேவோன்
சின்னத் தம்பிச் செம்மலும் இருவர்
மூத்தோன் இளையோன் எனப்பயந் தவர்க்கு
நடுநா யகமாய் நவிலும் மணியெனச்
சடையிற் கங்கை தாங்கியோன் அருளால்

வையம் சிறக்க வாழ்வு மலர
ஐயனும் அன்னையும் அகமகிழ் வெய்த
இப்பராபவ ஆண்டின் முற்படும் அந்தப்
பராபவ ஆண்டு பகர்சித் திரையில்
ஐந்தாம் நாளாம் கிறீத்துவ ஆண்டு

ஆயிரத் துத்தொள் ளாயிரத்தா றேப்பிரல்
நாள்பதி னேழில் நங்கையர் திலகம்
நாகம் மாவை நற்குலக் கொழுந்தெனப்
பெற்றனர் தாமே பேறெலாம் ஓங்கிட;
குழவிப் பருவம் கோதை நீங்கிப்

பிள்ளைப் பராயம் பெற்ற காலை
அன்னை தந்தையரை இழந்தும் அதனல்
ஆற்ருெணுத் துன்பம் அலைத்த போதும்,
இடுக்கண் நீக்கி இன்முகத் தோடே
எழில்நிலை மாரு திமயம் போலச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழ் கற்றும் சிவநெறி காத்தும்
அந்தமில் கற்புடை அரும்பெரு விளக்கு
தையலர் தமக்குத் தையலாம் கலையை
செவ்விதிற் பயிற்றித் திகழ்துணை யாக
ஆசை அண்ணனும் அருமைத் தம்பியும்

நேசமிக் குடையராய் நீள்நிலம் தன்னில்,
ஒருகுலைத் தேங்காய் போல ஒருங்கே
பிரிப்பின்றி நிற்கும் பெற்றிய ராசி
உடன்பிறப் பாளரோ டொற்றுமை யாக
ஒருவருக் கொருவர் உயிர்என உதவி

இருக்கும் நாளில் இனிமைசால் மங்கலப்
பேச்சுகள் தோன்றின பேரறப் பயனால்,
குரும்ப சிட்டி ஊர்தனில் வாழ்ந்தோன்
கரும்பென யார்க்கும் கனிவுடன் திகழ்வோன்
முத்துக் குட்டி முதல்வன் தவத்தால்

இத்தரை மீதில் தோன்றிய ஏந்தல்
ஈட்டல் வகுத்தல் காத்தல் ஈதல்
பாட்டும் பயனும் பகரும் வகையில்
நின்றறம் புரிவோன் நிமலனைத் தொழுவோன்
சென்ற இடமெல்லாம் செயக்கொடி நாட்டும்

பெரும் பேராளன் பிரபல வர்த்தகன்
பண்டார வளைதனில் பண்புடன் வாணிபம்
எண்டிசை புகழ்ந்திட இனிதாய்ச் செய்வோன்
வல்லிபுரம் என்னும் வண்மை யாளன்
வல்லவன் நல்லவன் மாண்புடை யானைத்

தன்பெருந் தலைவனாய்க் கொண்டில் லறத்தை
அன்புநீர் பாய்ச்சி அருளுணர் வோடு
எள்ளரும் சீர்த்தி இன்தமிழ்ப் புலவன்
வள்ளுவன் காட்டிய வழியதில் நின்று
செந்தமிழ்ப் பண்பு சிறந்திட என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தா விளக்காய் நானிலம் தன்னில்
பொன்னாலை உறைதரு புனிதமால் அருளால்
மன்னாதி மன்னர்கள் மகிழ்ந்துளம் வளர்த்த
செந்தமிழ் மொழியைச் சீருடன் காக்க
அந்தக அரசுக் கெதிராய் அறப்போர்

புரிந்த பாவை பூவையர் திலகம்
மெல்லிசைச் செல்வி மேதினி யுள்ள
நல்லியல் மங்கையர் நயக்கும் தலைவி
மங்கையர்க் கரசியாம் மறத்தமிழ்க் கொடியுடன்
ஆலமர் செல்வன் அடியிணை வழுத்தும்

ஞாலம் போற்றும் ஞானாம் பிகையும்
இருமூன்று வயதில் இறைவன் அழைத்த
திருவுறை செல்வி யோகாம் பிகையும்
இன்முகத் தாலே எவரையும் கவரும்
நன்னெறி யாளன் நலம்பொலி நம்பி

கணேசன் அருளால் காத்திடு செல்வன்
கணேசா னந்தன் காசினி மெச்சும்
கிருஷ்ண வேணிக் கிளிமொழி யாளும்
அரும்பெறல் மணியாம் ஆற்றல்கள் மிக்கோன்
கோபாலச் சந்திரன் குணக்குன்றும் இவர்

யாவரும் உன்றன் மாதவப் பயனாய்
உத்தம மக்களாய் உற்றநின் பேற்றை
வாழ்த்துவம் யாமே வாழ்த்துவம் யாமே,
இவர்களுள்,
பண்ணாகப் பதிதனில் பண்புமிக் கோனாய்

தண்ணார் தமிழைச் சால்புடன் காத்தோன்
அப்பாப் பிள்ளை எனும்பேர் ஐயன்
இப்பார் ஏத்த இனிதாய்ப் பெற்ற
நாவலன் தளபதி நாடு கண்ட
காவலன் கன்னித் தமிழைக் காப்போன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் மாற்றார் அஞ்சிட வாதிடும்
அரியெனத் திகழ்வோன் அஞ்சா நெஞ்சன்
ஈழக் காந்தி செல்வா வழியில்
வாழத் தமிழே வழிதான் வகுப்போன்
வட்டுக் கோட்டை நாடாள் மன்ற

உறுப்பின னாக உவப்புடன் தொண்டு
பற்பல புரிவோன் பண்புடைத் தியாகி
பொற்புயர் சீலன் புனிதன் மாதவன்
துலங்குபேர் அரசு தமிழின் பேரால்
இலங்கை நாட்டில் இன்றே அமைப்போம்

என்றுபோர் தொடுப்போன் எங்கள் தலைவன்
அமிர்த லிங்கனை மங்கையர்க் கரசிக்
குரியவ னாக்கினின் மருகனாய்ப் பெற்றும்,
செந்தமிழ் ஆங்கிலம் சிறப்புடன் கற்றோன்
செம்மைசேர் இயல்புடைச் சீரிய நம்பி

காட்லிக் கல்லூரி கவினுற் றோங்க
நாட்டமாய் நற்பணி புரிந்திடு வோனும்
அரியநல் ஆசான் திகம்பர லிங்கனை
ஞானாம் பிகைதன் நாயக னாக
நயந்துமே பெற்றதால் மருகனாய்க் கொண்டும்,

அருங்கலை பயிற்றிக் கணேசா னந்தனைத்
திரைகடல் ஓடித் திரவியம் தேடி
உயர்வுறு வாணிகம் உவந்துமே பார்க்க
விடுத்தவர் வளம்பெற விரும்பி நீ செய்தும்
தொடுத்த பேரன்பால் தொடர்புறு சுற்றம்

தழைத்திட உறவுகள் தாவில் குணத்தோன்
உழைப்பால் உயர்ந்தோன் குமரை யாவெனும்
அன்பன் பயந்த அருமைப் புதல்வன்
பின்னரும் பற்று நிலைத்திட என்றும்
காடு கொன்று கழனி யாக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடுசேர் காணி விருத்திப் பகுதியில்
எழுது வினைஞனாய் ஏற்றமாய்ப் பணிபுரி
பழுதில் நம்பி பண்புயர் சீரோன்
உரிமை மருகன் தங்க ராசா
பெருமை யாகக் கிருஷ்ண வேணியை

தன்மனை யாளாய்ப் பெற்றிட வைத்தும்,
பொன்னெனத் திகழும் இளைய புதல்வன்
கோபாலச் சந்திரன் குவலயம் தன்னில்
யாவரும் மதிக்க யாங்கணும் புகழ்பெற
வித்தகச் செம்மலாய் வினைத்திட்ப முடையனாய்

சத்திய சீலனாய் வந்திட விரும்பி நீ
உயர்கல்வி ஊட்டி வளர்த்தபே ராற்றலும்
கனியமு தாக உதித்தகாண் டீபன்
பகீரதன் அருள்மதி அன்பழ கனுடன்
முகுந்தனும் பேரர் முன்நின் றாட

மதலை இன்பம் அள்ளிப் பருகி
விதம் விதமாக மகிழ்ச்சி பூக்க
வாழ்ந்த நல்வாழ்வு யாம் அறி காலை
தவத்தின் விளைவாம் தனிப்பயன் அன்றோ
அதனால்,

நின்னரும் சிறப்பை எவ்வா றுரைப்போம்
பொன்னும் மணியும் புகழும் அறனும்
இம்மா நிலத்தில் எல்லாம் இனிதாய்
அம்மா பெற்றனை! அமுதே உன்னை
தவத்திடை அலர்ந்த மலரே என்கோ

உவர்க்கடல் உண்ணும் காரே என்கோ
இன்னிசை விளைத்த பயனே என்கோ
மன்னிய தமிழைக் காத்திட மங்கையைப்
பயந்த தாயே பாரினில் யாமே
எவ்வா றுரைப்போம் எவ்வா றுரைப்போம்

உலகம் உளவரை உண்மைநீ வாழ்வாய்
அலகில் சிறப்புடை அன்னையே பிரிந்தே
இறைவன் தாளை இணைந்தனை
ஏந்துவோம் போற்றுவோம் என்றும் நாமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவன் புலம்பல்

(1)

என்னரும் துணைவி யாகி
எனக்கிதம் அளித்த செல்வி
பொன்னணி நங்காய் அந்தோ
புவியினில் வருந்தி ஏங்க
என்னைநீ விட்டே ஏகி
சென்றனை முறையோ எங்கே
உன்னெழில் உருவம் காண்பன்
ஓருரை பகர்ந்தி டாயோ.

(2)

நெற்றியில் திலகம் தீட்டி
நீள்குழற் கற்றை தன்னில்,
உற்றநற் பூக்கள் சூட்டி,
உடலது மறையு மாறுல்,
நற்றவம் அஃதே இந்த,
நங்கையர் தமக்கு என்ற
கற்றவர் சொல்லுக் கேற்ப
காசினி பிரிந்து சென்றாய்.

(3)

தன்கரம் பற்றி வாழும்
தலைவனுக் குரிய தொண்டை
நன்முறை பிறழா தென்றும்
நங்கையர் செய்வ ராலுல்
முன்னையோர் அறத்தைக் காப்பர்,
முத்தமிழ் மரபு வாழும்
மன்னிலை பெறுவர் வான
நாடதில் மகிழ்வர் என்பாய்.

(4)

வாசுகி மற்ற மேலாம்
வளர்தமிழ் மாதர் போல
நேசமே மிக்கு நீயும்
நெஞ்சினில் வாழு கின்றாய்
மாசிலாப் பொன்னே என்றும்
மாறிடா அறங்க ளாற்றிக்
காசிலா முத்திப் பேற்றைக்
கருதியா விரைந்தாய் அந்தோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

(5)

இல்லத்தின் சிறப்பெல்லாம் எங்கே காண்பன்
இனியுன்போல் எவரென்னைப் போற்றி வாழ்வர்
வெல்லத்தின் சுவைபோல வாழ்வை யாக்கி
விளங்குபெரு மனிதனாய் மாற்றி வைத்தாய்
செல்வத்தின் மடியிருத்தி வளர்த்த வுன்றன்
செல்வங்கள் அம்மாவென் றலறும் ஓசை
மெல்லத்தா னுன்காதில் விழவா இல்லை
மென்சிறகு இழந்தபெரும் பறவை யானேன்.

வேறு

(6)

இப்பிறப் பல்ல வேறு
எண்ணரும் பிறப்பை யானே
தப்பிடா தெடுக்க நேர்ந்தால்
தையலே நீயே எந்தன்
செப்பரும் மனையா ளாகச்
செய்தவப் பயனால் வந்தே
அப்பிறப் பெல்லாம் கீர்த்தி
அளித்துநீ வாழ வேண்டும்.

## சகோதரர் நாகலிங்கம் - சின்னத்தம்பி

புலம்பல்

(1)

ஈன்றதாய் எமைப்பிரிந்தே இவ்வுலகு நீங்க
எமக்கொருபேர் வாழ்வதனின் துணையாகநின்று
வான்தருமோர் மழையாக வாழ்விக்கு மாபோல்
வையத்தில் தங்காய்நீ வளமூட்டி நின்றாய்
ஆன்றவிந்த அறிஞர்போல் நல்லுரைகள் கூறி
ஆயபெரு மனிதனாய் மாறிடவே வைத்தாய்
ஏனின்று பிரிந்திட்டாய் எங்குன்னைக் காண்பேன்
என்னருமைச் சோதரியே ஏக்கமது தீர்ப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2)

வாழ்விலிதம் பெற்றிடவும் வற்றாத செல்வம்
வளம்கொழித்தே இல்லத்தில் பெருகிடவும் அக்கா
தாழ்வுஇலாப் பேருதவி நீசெய்தாய் அதற்குத்
தன்னலமில் அத்தானும் அவர்தம்மை உனக்கே
ஊழ்வினையின் நற்பயனால் உனக்களித்தேன் அன்று
உவாமதியே நீமறந்து இறைவனடி நாடி
ஆழ்துன்பப் பிறப்பறுத்தே சென்றாயோ அந்தோ
ஆருலகில் எமக்குதவி ஆற்றிடுவார் அக்கா!

## புதல்வி மங்கையர்க்கரசி
### புலம்பல்

(1)

பெண்மகவு பிறந்ததெனப் பிறர்உரைத்தால் போதும்
பேரிடியாம் அதுவென்றே நிலைகுலைந்து நிற்கும்
மண்ணுலகில் தலைமகளாய் நான்பிறந்த வேளை
மகிழ்வுடனே சீராட்டிக் "குலந்தழைக்க வந்த
கண்மணியே கற்பகமே இனிமையெலாம் காட்டும்
காணரிய பெருவாழ்வே என்றெல்லாம் ஏத்தி
பெண்ணரசி சிவநெறியை வளர்த்தபெரும் பாண்டிப்
பேரரசி நாமத்தை நீஎனக்குச் சூட்டி

(2)

அடிமையிருள் அகன்றோடத் தமிழ்நாட்டி லன்று
அரியதமிழ்ப் பாவாலே புரட்சியினைச் செய்தோன்
குடியாட்சி காணவென மக்களிடை உணர்ச்சி
குடிகொள்ளச் செய்திட்டோன் பாரதிதான் கண்ட
மிடிபோக்கும் புதுமைப்பெண் கூறிடுநல் லுரைகள்
மேதினியில் கைக்கொள்ள வேண்டுமென நீயும்
வடிவாக உணர்ந்தேநான் வளரிசையாம் தமிழின்
வளங்காண வைத்திட்ட அம்மாவோ அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

(3)

என்னரும் வாழ்வுக் கேற்ற
இனியநற் றுணைவன் தன்னைப்
பொன்னரும் புகழே பூக்க
புவியினில் தேடித் தந்தாய்
என்னுயிர் நாதன் பின்னே
இசைந்து நான்செல்ல மக்கள்
நன்னிலை அடைய நீயும்
நன்குதான் பார்த்தாய் அம்மா.

(4)

வீட்டினில் அம்மா உள்ளார்
விளங்குசெல் வங்கள் பேண
கூட்டினில் வாழும் பட்சி
போலவே உள்ளார் என்றே
காட்டினில் நின்று லென்ன
கழனியில் நின்று லென்ன
வாட்டமே கொள்ளேன் அம்மா
வாழ்வினில் என்று காண்பேன்.

(5)

அரசிய லியக்கம் தன்னில்
'அவரொடு' இணைந்தே நானும்
உரியநல் லறங்க ளெல்லாம்
உவப்புடன் செய்து நிற்க
பரியநற் கலத்துக் குற்ற
மாலுமி போல நின்றாய்
தெரியவே இல்லை திக்கு
தெளிந்திட உரைப்பாய் அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதல்விகள் ஞானம்பிகை - கிருஷ்ணவேணி
## புலப்பல்

(1)

தொட்டிலில் இட்டே யெம்மை
தூங்கிட வைக்க அம்மா
வட்டவோர் நிலாவை மற்ற
வளர்கிளி தன்னைக் கூவி
இட்டமாய் பாட்டி சைப்பாய்
இனியவுன் தாலாட் டெம்மை
மட்டிலா உவகை யூட்ட
மறந்துநாம் உறங்கு வோமே.

(2)

"தளர்விலா உறுதி யோடு
தம்பிதங் கையர்க ளென்றும்
அளவிலா இன்ப முற்று
அடம்பெனத் திரண்டு நின்றல்
உளரெவர் எதிர்ப்பர் உம்மை
ஒன்றியே வாழ்மின்" என்பாய்
உளம்மகிழ் வாக அன்று
உரைத்த அவ்வுரைக ளெங்கே.

வேறு

(3)

எங்களுக் கினியபொரு ளீந்தே அம்மா
இனியநன் மணங்கள்தமைச் செய்து வைத்தாய்
திங்களது பொழிகின்ற தண்மை போலத்
தேடியெம் இடங்கள்தமை நாடி வந்து
உங்களது துணையோர் தம்மை அன்பாய்
உச்சிமோந் தின்புற்றே உவகையாக
இங்கிதங்கள் தமைக்காட்டி வளர்த்த பெற்றி
எங்குச்சொல் அம்மாநீ சென்ற தேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் கணேசானந்தம் - கோபாலச்சந்திரன் புலம்பல்

(1)

ஈன்றெம்மைப் புறந்தந்து எங்கள் அம்மா
எண்ணில்லாச் சுவையுணவு தம்மை யூட்டித்
தேன்சொட்டும் பல்வேறு கதைகள் கூறி
திறமைதரு கல்லூரிக் கனுப்பி வைத்து
வான்மிகர்த்த அறிவுவெல்லாம் பெறவே நாங்கள்
வழிசமைத்த அம்மாவோ அம்மா அம்மா
ஏன்நீயும் பிரிந்திட்டாய் விதியின் கூறு
இனியெமக்குத் துணையாவர் அந்தோ அம்மா.

(2)

'நல்லறங்கள் இவ்வுலகிற் செய்ய வேண்டும்
நாடென்றும் உமைவாழ்த்த வாழ வேண்டும்
செல்வத்தின் பெருஞ்செல்வம் கல்விச் செல்வம்
சிந்தையது வருந்திநீர் கற்க வேண்டும்
இல்லத்தில் இணைந்தொன்றாய் வாழ்வ தொப்ப
இவ்வுலகில் என்றென்று மிருக்க வேண்டும்.
கல்லொத்தோர் மனம்மாற்றும் கருவி யான
கனிவுள்ளம் வேண்டுமெ'மக் கென்றாய் அம்மா.

(3)

நற்றாயை இழந்தசிறு கன்றே ஆனோம்
நற்கொம்பை இழந்தகொடி என்ன ஆனோம்
வற்றாத சுனைவற்ற வாடு கின்ற
வான்பறவை யானோம்நாம் உலகில் இன்று
உற்றார்யார் எமக்குதவ யாரோ அம்மா
உன்போல அளிசெய்து காக்க வல்லார்
கற்றாவின் மனமென்பார் அஃது எங்கே
கண்ணீரைத் துடைத்தின்பம் காட்டும் அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருகர் அமிர்தலிங்கம்

### இரங்கல்

(1)

இம்பரில் சிறந்து வாழ
 இனிய நன் மனையாளோடு
செம்பொருள் தன்னை ஈந்து
 சிறப்புற வைத்த யாமி
உம்பர் வானுல கேயாள
 உவந்துநீ சென்று யிங்கு
நம்பினோ ருன்னை யெண்ணி
 நலிந்தழும் நிலைதான் காண்பாய்!

(2)

அரசியல் வாழ்வு அன்றே
 அலர்ந்திடத் தந்தை யார்பின்
உரியநற் றவத்தி னாலே
 உறுதுணை யாக நின்று
அரியபேர் உதவி செய்த
 அருமையைச் சொற்க ளாலே
விரிவுற விளக்க லாற்றேன்
 விம்முதே நெஞ்சம் அந்தோ!

(3)

இறப்பதிங் கெதிர்ந்திட் டாலும்
 இன்தமிழ்க் குரிமை கோரி
அறப்பெரும் போரை யாற்றி
 அருஞ்சிறை யுற்ற போதும்
மறப்பிலா மக்கள் எங்கள்
 மணிகளைப் பாது காத்த
அறப்பெருந் தாயே மாமி
 அவனியிற் காண்ப தென்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மருமக்கள் - தீகம்பரலிங்கம் - தங்கராசா**
**இரங்கல்**

*(1)*

இருவருளம் இணைந்தொன்றாய் வாழ்வதாக
இனிமைதரு காதலவர் கொண்டா ரென்றால்
தருமமில்லைப் பிரித்திடுதல் தக்கோர் கொள்ளார்,
தண்டமிழர் தலைவாழ்வும் காதல் வாழ்வே,
உரிமையுள மருகரிவர் என்றே மாமி,
ஊரேத்த உயர்மணங்க ளினிது செய்து,
பெருமைதரு பெண்களொடு பிறசெல் வங்கள்,
பீடுடனே எமக்களித்த பெற்றி என்னே!

*(2)*

வீட்டுக்கு நாம்வந்தால், விளைந்த அன்பால்
விரும்பிடுகின் பேரர்தமை, விரைந்து ஏற்று
நாட்டமுடன் அவர்தமக்கு நன்கே முத்தம்
நயந்துமிகச் சொரிந்தமுத உணவும் ஊட்டிக்
காட்டியபே ரன்பெங்கே? கண்ணீர் விட்டுக்
கதறியழும் பேரர்களோ கவலை மிக்கு
வாட்டமுட னிருக்கின்றார்; வருத்த மாற்றி
வளமூட்ட யாருள்ளார், சொல்லு மாமி!

**பேரர்கள் - காண்டீபன் பகீரதன் அருள்மதி அன்பழகன் முகுந்தன்**
**இரங்கல்**

*(1)*

தங்கமெனக் கூறிடுவீர்
"தம்பிராசு" என்றிடுவிர்
"செங்கரும்பு போலினிக்கும்
சிங்காரச் செல்வங்காள்;
திங்கள்வரு வானத்தில்
திகழ்மீன்கள்" என்றுரைப்பீர்
உங்களது எண்ணம்தான்
உள்ளத்தை வாட்டுதல்லோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2)

அப்பாவுடன் அம்மாவும்
அப்பாலே சென்றுவிட்டால்
தப்பாதெமைத் தூக்கியன்பாய்த்
தாலாட்டும் பாடிடுவீர்,
நப்பாசை யுடன்நாங்கள்
நல்லகதை கேட்டிட்டால்,
இப்பாரின் எலிசிங்கம்
எல்லாம்முன் வந்திடுமே.

(3)

"காலையிலே எழுந்திட்டுக்
கடவுளடி தொழுதப்பால்
சோலையிலே சேர்ந்தொன்றாய்
சூழ்ந்திருமின் கல்விகற்று
மாலையிலே பாலருடன்
மகிழ்வாக விளையாடிப்
பாலையுண்ணும் அன்னம்போல்
வாழ்ந்திடுமின்" என்றிட்டீர்.

(4)

முக்கால வேளைக்கும்
முன்னின்று உன்கையால்,
தக்காளிச் சம்பலுடன்
தனிக்கறிகள் தாம்சமைத்து
இக்காலம் எந்நாளும்
எமக்களித்த அம்மம்மா
எக்காலம் நாமுன்னை
எங்கேதான் காண்பதுவோ!

(5)

பொன்னணிகள் அணிவித்துப்
பொட்டிட்டுப் பட்டுடைகள்
மின்னியெங்கள் உடல்தன்னில்
மேலழகு தரவமைத்துப்
பண்ணியநல் உரைகூறிப்
பாங்காக உலாவருவீர்
கன்னித்தமி ழுன்னையினிக்
காண்பதெங்கே அம்மம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்ருர் உறவினர்
### இரங்கல்

(1)

பாசமிகு முடன்பிறந்தார் பண்மிகு
மருங்கணவன் பகருங் கல்வி
நேசமிகுங் குணமக்கள் நிறைபுகழ்சால்
மருமக்கள் நிலவும் சீரார்
ஆசைமிகும் பேரர்களும் உறவினரும்
சிறப்பனைத்தும் அறத்தின் போக்கில்
ஈசனருள் வழியினிலே வாழ்பவர்க்கு
வாய்த்திடுதல் இயல்பே யன்றே

(2)

கரமிழந்த களிறெனவா ருயிர்க்கணவர்
துயரமுறக் கனிந்த அன்புப்
பெருமைமிகு முடன்பிறந்தார் சிறையிழந்த
மயில்களெனப் பெரிதும் நோவ
வரமுயர்ந்த குணமக்கள் வலையிலகப்
படுமீன்போல் மறுகி வீழத்
தரமுயர்ந்த குணக்குன்றும் நாகம்மா
இறைவனடி சார்ந்தா ரன்றே.

## பொது-இரங்கல்

(1)

நாமுந்த னிடம்நாடி வந்தாற் போதும்
நகைமுகத்தோ டெம்வரவை நன்று யேற்றுத்
தேமருந்தே என்றாலும் பகுத்த ளிப்பாய்
தெய்வமறை திருக்குறளின் வழியில் நின்று
காமரும்பேர் வாழ்விலறம் செய்த அம்மா!
கற்பகமே! கடவுளடி மறவா உன்றன்
நாமமதை நாம் மறவோம் நங்கை நல்லாய்
நற்றமிழுக் குயிரளித்தோய் அடைக சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைகளின் நிலையறிந்தே இயன்றபல
இன்னுதவி இயற்றி வந்தே
தாழைதரு நறும்பூப்போல் தமிழ் மணத்தைப்
பரப்பிவந்த தையல் நல்லாள்
வாழையடி வாழையெனக் குலந்தழைக்க
வல்லிபுரத் தோன்றல் வாழப்
பீழையெலாம் துடைத்தளித்தாள் நாகம்மா
பிறப்பின்றித் தெய்வ மானுள்.

## தேற்றம்

### கட்டளைக் கலித்துறை

தோற்ற முளதேல் மறைவுமுண் டிங்ஙனம் தோன்றியுற்ருர்
போற்றுநல் வாழ்வுற்று மின்போல் மறைந்த புகழ்க் கொடியாய்ச்
சாற்று நாகம்மா அடைந்த சிவகதி தானினைந்து
தேற்றம் பெறுவோம் நிலையாத வாழ்வின் திறமிதென்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செனட்டர் திரு. ச. நடராசா அவர்கள்

வழக்கறிஞர்,

மல்லாகம்.

## கடமையின் காவலர்

திருமதி நாகம்மா வல்லிபுரம் அவர்களுக்கு எங்கள் இறுதி மரியாதையைச் செலுத்த வந்துள்ளோம். இவர்கள் இவ்வளவு சீக்கிரம் எங்களை விட்டுப் பிரிவார்கள் என்று எண்ணவேயில்லை. அவர்களை எனக்கு என் நண்பன் அமிர்தலிங்கம், அவரின் மகள் மங்கையர்க்கரசியை விவாகம் செய்த நாள் தொடக்கம் தெரியும். இவர் மெதுமையான பேச்சும், புன்சிரிப்புள்ள முகமும் உடையவர்.

இவரின் மன உறுதியையும், கடமைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பவர் என்பதும் நான் அறிந்தது. அன்பர் அமிர்தலிங்கம் அவரின் மனைவியாரும், நானும் மற்றும் தமிழரசுக்கட்சி அங்கத்தவர்களும் 1961ம் ஆண்டு 'பனாகொடையில்' சிறீமாவோ அரசாங்கத்தால் தடுப்புக்காவலில் ஆறு மாத காலம் இருந்த காலம்.

நாம் அந்த இடத்திற்குக் கொண்டுபோய் இரண்டு மாதங்கள் கழிந்தபின்தான், உறவினரோ, சுற்றத்தவரோ, தடுப்புக்காவலில் உள்ளவர்களைக் கிழமைகளில் ஒருநாள் - சனிக்கிழமைகளில், 3மணித் தியாலம் பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

இந்த அம்மா தன் மகளையும், மருமகனையும் பார்ப்பதற்கு, தன் கையில் அவர்களின் இளைய மகனை ஏந்திக்கொண்டு வந்தார்கள். மங்கையர்க்கரசி, பிள்ளைகளையும் தாயையும் கண்டவுடன் மனம் கலங்கி விட்டார்கள். எந்தத் தாயும் அந்த நிலையைச் சாதாரணமாக அடைவது வழக்கம். ஆனால் அவர்கள் மகளுக்கு ஆறுதல் சொல்லத் தொடங்கினார்கள்:- அவற்றில் சில:-

"...................................மனத்தைரியத்தை விடாதே. நான் பிள்ளைகளைப் பார்த்துக்கொள்வேன். உன் கணவனுடன் தமிழுக்குத் தொண்டு செய்யப் புறப்பட்டாய் அஃது உன் கடமை; நான் கலங்கவில்லை. நீ ஏன் கலங்குகிறாய். கடமையைத் தொடர்ந்து செய்............" என்றார்கள்.

இதிலிருந்து இத்தாயின் பெருங்குணம் தெளிவாகிறது. அதிகம் பேசத் தேவையில்லை. ஆம் இவர் கடமையின் காவலர், இந்தக் கடமை உணர்ச்சி கொண்ட தாயின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. வ. நவரத்தினம் அவர்கள்
*பாராளுமன்ற உறுப்பினர்,*
ஊர்காவற்துறை.

## புகழ் நிறைந்த புண்ணியவதி

காலன் செயல்முன் கதியற்றவர்களாகக் கலங்கி நிற்கும் நாமெல்லோரும் இறைவனே நமக்கெல்லாம் புகலிடம் என்பதை முற்றமுணர்ந்து அவனடியார்களாகவே இங்கு கூடியிருக்கின்றோம். திருமதி வல்லிபுரம் அம்மையார் சிவபதம் அடைந்துவிட்டார்கள். அவரை இழந்து நிற்கும் கணவருக்கும் புதல்வியர் புதல்வருக்கும் மருமக்களுக்கும் நாம் என்ன ஆறுதல் வார்த்தை சொல்ல முடியும். மறைந்த அம்மையார் உண்மையாகவே புகழ் நிறைந்த ஓர் புண்ணியவதி; ஹிந்து தர்மபத்தினி என்ற தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுபட்ட ஒவ்வொரு பெண்மணியும் தான் சுமங்கலியாகவே, பாயிற் படுக்காமல் இறைவனடி சேர்ந்து விட வேண்டுமென்பதையே அரும் பேறுகக் கருதுவாள், அத்தகைய அரும்பேற்றைப் பெற்றுள்ளார் தமதன்னை என்பதை நினைவுகூர்ந்து தம்மைத் தேற்றிக் கொள்வார்களாக.

இல்லற வாழ்க்கையையும் வீட்டுப்பணிகளுமே பெண்களின் கடமை என்று கருதிவந்த நமது சமூகத்திடையே அம்மையாரின் புதல்வியரும் மருமக்களும் ஓர் புரட்சி வாழ்க்கையைக் கடைப்பிடித் துள்ளனர், மக்கள் சேவையில் ஈடுபட்டுள்ள இவர்களுக்கு உறுதுணை யாக நின்று, "வீட்டையும் குழந்தைகளையும் நான் பார்த்துக்கொள் ளுகிறேன், நீங்கள் போய்வாருங்கள்" என்று விடைகொடுத்தனுப் பிய இந்த அன்னையும் தமிழ் மக்களுக்குச் சேவை செய்தவரே அன்னாருக்குப் பல்லாயிரம் தமிழ்பேசும் மக்கள் தமது நன்றி கலந்த அஞ்சலியைச் செலுத்தி, துயரத்திலும் பங்கு கொள்ளுகிறார்கள் என்பதையும் தெரிவித்துத் துயர் துடைத்துக் கொள்வார்களாக.

அம்மையாரின் ஆத்மாவைத் தமது திருநிழலின் சேர்த்துக் கொண்ட எம்பெருமானின் புகழைப் பாடுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் செனட்டர்
திரு. நா. நல்லையா அவர்கள்
யாழ்ப்பாணம்.

# பேறு பெற்ற செல்வி

நான் வட்டுக்கோட்டைப் பா. உ. திரு. அமிர்தலிங்கம் அவர்களைச் சந்திக்கப் போகும் சமயங்களில், இவ்வுலக வாழ்வை நீத்த அம்மையார் திருமதி நாகம்மா வல்லிபுரம் அவர்களைக் கண்டு பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அவர்கள் என்னை மிகவும் அன்பாய் வரவேற்றுபசரிப்பார். அவ்வேளைகளில் இந்த ஊரிலும், இத்தொகுதியிலும் உள்ளவர்களை விசேடமாய் வறியவர்களை மிகவும் அன்பாய் உபசரிப்பதை நான் காணக்கூடியதாயிருந்தது. உலகில் உள்ள பெரியோர்களைப் போன்று அம்மையாரவர்கள் அன்பும் அருளும் பெற்று மிகவும் அடக்கமாய் வாழ்ந்தார். இதன் பெறுபேறாய்த் தமிழ் இனத்தின் அடிமை விலங்கறுத்து, அவர்களைச் சுதந்திரமாகவும் மகிழ்வாகவும் வாழவைக்க ஓர் அருமைப் புதல்வி மங்கையர்க்கரசியையும், மருகர் அமிர்தலிங்கமவர்களையும் தமிழ் இனத்திற்குத் தந்தார்கள்.

அம்மையாரின் உதவியும் ஒத்துழைப்பும் உற்சாகமும் இல்லாவிட்டால் தன்மானமிழந்திருந்த தமிழ் இனம் அமிர்தலிங்கம் தம்பதிகளின் அளப்பரும் சேவையை முழுதாகப் பெற்றிருக்க முடியாது. தமிழ் இனத்தின் பலதிறப்பட்ட போராட்டங்களில் எல்லாம் அவரும் அவருடைய குடும்பத்தினரும் அடைந்ததுன்பங்களை எல்லாம் அம்மையார் தம்முடைய பரித்தியாக சுபாவத்தின்படி இன்பமாயனுபவித்தார். இவ்வுலகில் பெருமையுடனும் சந்தோஷத்துடனும் வாழ்ந்தார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 11வது வாலிப மகாநாட்டு இறுதி வைபவத்தில், காங்கேசன்துறை மைதானத்தில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மங்கையர்க்கரசியின் அன்புத் தாயார் இவ்வுலகைப் பிரிந்த துக்க செய்தியைக் கேட்டுத் திடுக்குற்று, தங்கள் இதையங்களையும் கண்களையும் விண்ணுலகுக்கேறெடுத்தனர்.

*இவரின் ஆன்மா பரகதியடைவதாக.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. மு. ஆலாலசுந்தரம் அவர்கள்

*வழக்குரைஞர்.*

# தமிழ் காத்த தையல்

பிறப்பிற்கும் இறப்பிற்குமிடையிலுள்ள வாழ்வுக் காலத்தில் ஒவ்வொரு உயிரும் பல சாதனைகளைச் சாதிப்பது இயல்பு. அரும்பெருஞ் சாதனைகளைத் தாமாகவே நேரிடையாகச் சாதிப்பவருமுண்டு, இன்னொருவர் மூலமாக, மறைமுகமாகச் சாதிப்பவர்களுமுண்டு, இவர் இரண்டாம் வகைக்குரியவர்.

இவருடைய நற்பண்புகளும், குணமும் நல்ல தாய்க்குரியவைகளாகவே இருந்தன வென்பதற்கு அவருடைய புதல்வர் சான்றுவர். இந்த நல்ல தாயின் சேவையுள் - சாதனையுள் சிகரமாயமைவது தமிழ்பேசுமினத்திற்கு - இவருடைய மூத்த புதல்வி திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் ஆற்றிவரும் தொண்டே.

நாடெல்லாம் போற்றும் நல்லாளை மகளாய்ப் பெற்றதோடல்லாமல், அம்மகளின் விடுதலைப் பணிக்கு பக்க பலமாய் உறுதுணையாயிருந்து அருந்தொண்டாற்றியுள்ளார். மங்கையர்க்கரசியின் தொண்டினை, சேவையை, போற்றும்போது அத்தொண்டிற்கும் சேவைக்கும் அடித்தளம் இவ்வம்மையே, இவரின் ஆக்கமும் ஊக்கமும் விடுதலைப் போருக்கு உதவியது. ஆகவே இவரைத் தமிழ்காத்த தையல் என வையகம் என்றும் வாழ்த்தும், தன் மகள்மூலம் தேசப்பணிக்கு முதல்வராயிருந்ததோடு, தன் இல்லறத்திலும், இலக்கியம் கண்ட தமிழ்ப் பெண்ணாகவும் வாழ்ந்து, வாழ்வின் பயனை முழுவதும் பெற்று இயற்கையெய்திவிட்ட இவ்வம்மையாரின் ஆன்மா சாந்தி அடைக,

இவருடைய இழப்பினல் கலங்கிநிற்கும் குடும்பத்தவர் அனைவருக்கும் என் அனுதாபங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. க. மூ. வன்னியசிங்கம்
இளைப்பாறிய மலேசிய அளவையாளர்,
தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி,
வட்டுக்கோட்டைக் கிளை,
மூளாய்.

# பொறை பூத்த பெண்ணரசி

அன்பு, பொறை, தயை, ஈகை, இரக்கம் முதலிய நற்குணங்கள் பொலிய, இல்லத்தின் இலக்குமியென விளங்கிச் சகல சம்பந்துக்கள் பொலிய வாழ்க்கை நடத்திய திருமதி நாகம்மா வல்லிபுரம் அவர்கள், தாம் பெற்ற பெருவாழ்வைக் கண்டு இறுமாப்படைந்தவர் அல்லர். குழந்தை உள்ளம் படைத்தவராய், சிறியோர் பெரியோர், வறியோர் செல்வர் என்ற பாகுபாடின்றி எல்லோரையும் சமமாகவே கணித்து அன்புடன் ஆதரித்து வந்தவர்.

''தண்ணீர் நில நலத்தால் தக்கோர் குணங்கொடையால்'' அறியப்படும் என எம் அன்றோர் கூறினர். இவ்வுத்தமியின் பெருங்குணத்தாலும், மனங்கோணாது அள்ளி வழங்கிய கொடையாலும், இவரின் தகைமையை நாம் கண்டோம். நிலத்தின் நலனுக்கேற்ப நீரின் சுவை அமைவது போல் களங்கமற்ற இச் செம்மனச் செல்வியின் கருவில் உருவான செல்வக் குழந்தை இன்று எம் விடுதலைப் போராட்ட முன்னணியில் நின்று பணிபுரிவதால் அன்னையின் உள்ளத் தூய்மையும் அதில் மிளிர்ந்த சக்தியின் மகிமையும் எத்தகையன என உணரற்பாலன.

தன் மகள் ஈன்றெடுத்த அருமைக் குழந்தைகளின் பொறுப்பையேற்று, அன்புடன் பாதுகாத்து வந்தமையால் அன்றோ அன்னவர் தம் குழந்தைகளைப்பற்றிய மனக்கிலேசமின்றித் தாம் சிரமேற்கொண்ட நற்பணியைப் பங்கமின்றிப் புரிய ஏதுவாயிருந்தது. இவ்வம்மையார் என்னைக் காணும் தோறும் ''அப்பு வாருங்கள்'' என அன்புடன் முகமலர்ந்து உபசரித்து ''இந்தப் பிள்ளைகள் படாத கஷ்டங்கள் படுகிறார்களே, இறைவன் எப்போதுதான் இரங்குவாரோ'' எனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் சொரிந்து கூறுவாரேயன்றி, என்ருவது அவர்களைச் சினந்து ஒரு வார்த்தையேனுங் கூறியதில்லை. "அவர்கள் என்ன வம்பு வழக்குக்குப் போகிருர்களா? எங்கள் சாதிக்காக நல்ல காரியத்தைத்தானே செய்கிருர்கள். நானும் என் கடமையைச் செய்வேன்" என்று மனதைத் தேற்றிக் கொள்வார். வேருெரு தாயானல் "அடி பயித்தியக்காரி மாதம் மூவாயிரம், நாலாயிரம் சம்பாதிக்கக்கூடிய உன் கணவர் அதையெல்லாம் விட்டு உரிமைப்போராட்டம் என்றும், சமுதாய பணி என்றும் பிதற்றித்திரிகிருரே" எனச் சினப்பாரல்லவா? இதனல் இவரைப் பொறை பூத்த பெண்ணரசி எனலாம். இந்த உத்தமியின் மறைவு அவர் குடும்பத்தினர்க்கு மட்டுமல்ல, எங்கள் சமுதாயத்திற்கே—சிறப்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே சேர்ந்த ஒரு பெரு நட்டமாகும்.

தன் மகள் ஆற்றிவந்த நற்பணியில் பங்கம் விளையாது காக்க வென்றே உள் அன்போடு கொடுத்து உதவிய நல் ஆதரவின் பயனுகவே இன்று கௌரவ இராஜாங்கமந்திரியாரும், அவர் பராளுமன்றக் காரியதரிசியும், கௌரவ ஸ்தலஸ்தாபன மந்திரியாரும், மற்றும் செனற்றர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இல்லந்தேடிவந்து இவருடைய பூதஉடலைத் தரிசித்து, தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்திச் சென்றனர். இவர் பெற்ற பேறு வேறு யார் பெறுவாரோ!

இவ் உத்தமியார் தமது வாழ்க்கையிலேயே எம் இனத்தின் விடிவுக்கான நற்சகுனங்களைக் கண்டு ஒருவாறு சாந்தியடைந்தனர். அது எமக்கும் பெரும் ஆறுதல் அளிக்கின்றது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சி. க. திருச்சிற்றம்பலம்,
பட்டினசபைத் தலைவர்,
சங்கானை.

# மேலான தியாகம்

இந்த உலக வாழ்க்கை அநித்தியமானது. இறப்பு எப்போது வருமென்று யாரும் சொல்லிவிட முடியாது. "உறங்குவது போலும் சாக்காடு, உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" எனத் திருவள்ளுவர் அழகாக எடுத்துக் கூறியுள்ளார். இந்த அநித்தியமான வாழ்வின் இலட்சியத்தை மறந்து மக்கள் சுகபோக வாழ்க்கையில் அலைந்து திரிகின்றனர், ஆனால் இந்த அம்மையாரோ தானும் தன் மக்களும் சுகபோக வாழ்க்கையில் மாத்திரம் திளைத்தால் போதும் என்று எண்ணி வாழவில்லை. தமிழர் வாழவேண்டும், தமிழ்மொழி வாழவேண்டும் என்று தன்மகள் பகலிரவென்று பாராது பாடுபட்டு, சிறைப்பட்டுத் துன்பத்தை ஏற்றுக்கொண்டபோதெல்லாம் தடைக்கல்லாக இருக்காது, அத்துன்பத்தில் தானும் பங்கு கொண்டுவந்தார். தமிழுரிமைக்காக வாய் வீரம் பேசி, தனி வாழ்க்கையில் குடும்பத்தினரோடு உல்லாச வாழ்க்கையில் ஈடுபடும் தலைவர்களது தியாகத்திலும் இந்த அம்மையார் பொறுத்துவந்த துன்பம், செய்த தியாகம் எவ்வளவோ மேலானவை.நாட்டுப்பற்றுக்கொண்டோருக்கெல்லாம் இவரின் தியாக வாழ்வு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கட்டும். இவரது ஆன்ம சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகிறேன். எனது பட்டின மக்கள் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சி. மயில்வாகனம்
ஆசிரியர்,
மூளாய்.

## மங்கையைத் தந்த தங்கம்

நாகம்மா அம்மையாரின் இளமை நிலைமை தெரிந்தவருள் நானும் ஒருவன். இவ்வம்மையார் சிறு வயதிலேயே தாய் தந்தையர் இறக்கத், தனிமையுற்று, இரு சகோதரர்களும் பற்றுக்கோடாய் விளங்க வாழ்ந்தார். கல்வி கற்கும்போது மிகத் திறமையுடன் திகழ்ந்தார். எந்த ஒரு உடன் மாணவரும் குறை கூற நடந்தறியார். தயையும், பொறையும், நன்மொழியும் இன்முகமு மமைந்த சாந்த சொரூபி.

"சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை"

என வள்ளுவன் கூறிய வாக்குக்கு உத்தம இலக்கியமான புனிதை. இவரின் வாழ்க்கை இங்குள்ள மாதர் முன்மாதிரியாகக் கொண்டொழுகக் கூடிய தகுதியை உடையது. பெண் மக்கள் இவர்போல் வாழ்ந்துய்ய வேண்டும்.

இவர் தம் சகோதரர் வெளியூர்களில் பொருளீட்டுங்கால் கடிதங்களை அச்செழுத்தில் மாறுபடாதனவாய், பிள்ளையார் சுழி இட்டு எழுதுவார். அக்கடிதங்கள் ஒழுக்க நெறிப் போதனைகளை அடக்கியவையாக இருக்கும். அக்கடிதங்கள் உள்ளத்தை நன்முறையில் மாற்றும் செம்மை வாய்ந்தனவாக விளங்கும்.

இந் நன்நெறிச் செல்விக்கு வாய்த்த மணாளனுமோ இன்மொழி நன்னெறித் திருவுடையன். இவர் வாழ்விலுதித்த முதல்விக்கு இப் புனிதை தாம் கற்ற நூல்களிற் கண்ட திருவுறை செல்வி மங்கையர்க்கரசியின் பெயர் வைத்து அவரை "தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டு செய்யும் பண்பாளன் அமிர்தலிங்கச் செம்மலுக்கு அளித்தார். இவரை மங்கையைத் தந்த தங்கம் எனக் கூறுதல் மிகவும் பொருத்தமாகும். ஏனைய பிள்ளைகளுக்கும் கடவுளோடு தொடர்புடைய பெயர்கள் வைத்தார், ஆலயங்களுக்கு அரும் பொருள் உதவியும் வாழ்ந்தார். இவர் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி இராசபூபதி அருணாசலம் அவர்கள்

இ. த. அ. க. மாதர் முன்னணித் தலைவி,

சாவகச்சேரி.

## வீரத்தாய்

அன்னை நாகம்மா வல்லிபுரம் அவர்களுடன் நெருங்கிய பழக்கம் எனக்கில்லை என்றாலும், ஒரு சில வேளைகளில் பேசிப் பழகிய துண்டு.

நான் அறிந்த அளவில், அவர் அன்பு, அறம், அடக்கம் தயை, பொறை, பண்பு, பண்பாடு, நிரம்பிய ஒரு செல்வச் சீமாட்டி ஆவார். தளபதி திரு. அமிர்தலிங்கமவர்களைத் தேடி எடுத்த மாமியாரும், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமவர்களை ஈன்றெடுத்த தாயாருமாவர்.

இவர் தான் பெற்றெடுத்த ஐந்து செல்வ மக்களில் "நாட்டைக்காக்க வீட்டுக்கொருபெண்" என்றசுலோகத்திற்கிணங்க தனது மூத்த மகளை தமிழ் அன்னையின் அடிமைத்தளை அறுக்க பங்கெடுக்க வைத்த ஒரு வீரத்தாய்.

இவர் தனது மகள் சுதந்திரப் போராட்டங்களில் கலந்து சிறைவாசம் சென்ற நேரங்களிலும்கூட, தனது மகளின் குடும்பப் பொறுப்புக்களையும் வீட்டுப் பொறுப்புக்களையும் தனது குடும்பப் பொறுப்புக்களுடன் சலிக்காது பொறுமையுடன் ஏற்று பேரப் பிள்ளைகளுக்கு எதுவித குறையுமில்லாது பாதுகாத்து, தனது மகளுக்கும் மருமகனுக்கும் உறுதியையும் உற்சாகத்தையும் ஊட்டி ஆறுதலளித்த பெருமாட்டி.

இவர் இன்னும் சிறிதுகாலம் உயிருடனிருந்தால் எமது நாட்டிற்குக் கூடிய சேவை செய்திருக்க முடியுமென்பது எனது நம்பிக்கை.

இவரின் நடுத்தர வயதில் நேர்ந்த பிரிவினால் இவரது சுற்றத்தவர்க்கும் சூழ உள்ளவர்க்கும் ஆறுதல் பெறவும், இவரின் ஆன்மா சாந்தி அடையவும் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு. மு. சிவானந்தம் அவர்கள்**
*M. A., ஆசிரியர்,*
*சங்கானை*

## வீட்டுத் தொண்டால் நாட்டுப் பணி புரிந்தவர்

திருமதி நாகம்மா வல்லிபுரம் அவர்கள் சாதாரண வாழ்க்கை நடத்தி வந்தாலும், இன்று பலர் கவல இவ்வுலக வாழ்வை நீத்தார். காரணம், அவர் பெற்றெடுத்த செல்வம் நாட்டுத் தொண்டுக்கு முழுமூச்சாக ஈடுபட்டு வருவதேயாம். திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஈழத்தமிழர் இன்னல் துடைக்கும் நற்பணிக்குத் தம்மைப் பூரணமாக அர்ப்பணித்தற்குத் தோன்றாத் துணையாக இவர் விளங்கினர். வீட்டைத் துறந்து, மழலை சிந்தும் மக்களை மறந்து, நாட்டுப் பணியில் மகள் சென்றபோதெல்லாம், வீட்டுப் பொறுப்பேற்று உற்சாக மூட்டிய பெருமை இவரைச் சார்ந்தது. மகளின் தியாக வாழ்விற்கு இடையூறில்லாது, பெற்ற மனம் படும் துயர் பொறுத்து, வருவார்க்கெல்லாம் இன்முகம் காட்டி வாழ்ந்து மறைந்த அவர் ஆன்மா நற்பேறு அடைய இறைவனை இறைஞ்சுகின்றேன். அவர் பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்குச் சங்கானை வாழ் பொதுமக்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறேன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் கா. வேல்முருகன் B. O. L.
சங்கானை மேற்கு,
பண்டத்தரிப்பு.

## நல்லவர் - வல்லவர்

"நெடுநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

ஆம். இந்த உலகத்தின் பெருமை இதுதான். நேற்று இருந்தார் இன்று இல்லை. சிரித்துக்கொண்டே வள்ளுவர் உலகின் பெருமையைக் கூறுகின்றார். நிலையாமை உள்ள உலகில் நிலைபெற வைக்கும் ஆற்றல் ஒன்றுக்குண்டு. அதுதான் புகழ். அதனை இலகுவில் அடையமுடியாது. அன்பு, அருள், பொறை, கொடை, தியாகம் முதலிய அருங்குணங்களால் தான் அடையலாம். திருமதி நாகம்மா அம்மையார் புகழ் பூத்த புனிதவதியாய் உள்ளார் என்றால் மேற்கூறிய சகல நற்பண்புகளும் நிறைந்திருந்தார் என்பது தான் அதன் பொருள்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு அவருடைய பணிகள் இலை மறை காய்கள் போல இருக்கின்றன. பல்கிப் படர்ந்திருக்கும ஆலமரத்திற்கு ஆதாரம் வேர்தானே. வேர் எப்பொழுதும் நிலத்தின் கீழ்த்தான் இருக்கும். மரத்தின் நிழலில் மகிழ்வுறும் நாம் அதன் வேரைத்தானே வாழ்த்தவேண்டும். இல்லத் தலைவியின் இயல்பு இப்படித் தான் என சேக்கிழாரே கூறி விட்டார். பிள்ளைக்கனியை கறியாகச் சமைத்துதவியபரஞ்சோதியாரின் மனைவியார் வெண்காட்டு நங்கையைக் கூறும்போது "...........இல்லறத்தின் வேராக விளங்கு திருவெண்காட்டு நங்கை..........." என்றார். அவர்கண்ட இலக்கிய உண்மைக்கோர் எடுத்துக்காட்டாக விளங்கிய திருமதி நாகம்மா வல்லிபுரம் நல்லவர் மட்டுமன்றி வல்லவரும் ஆவார்.

வாழ்க நாகம்மையார் நற்புகழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. க. செ. சுர்வணராஜ் அவர்கள்
செயலாளர்,
இ. த. அ வாலிப முன்னணிக்கிளை,
நெல்லியடி.

## புகழ் உடம்பு சாகாது

பெற்றோர்களே! சகோதர, சகோதரிகளே! பாரதி கண்ட புதுமைப் பெண் என அரசியல் எதிரிகளாலும் போற்றப் படுகின்ற திருமதி மங்கயர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களை ஈன்றெடுத்து வளர்த்த உடம்புதான் இன்று செயலற்றுக் கிடக்கின்றது. ஆனல் தமிழன்னை இருக்கும் வரையும் மங்கயர்க்கரசி அவர்களின் புகழ் மங்காது. அதேநேரத்தில் அவரை ஈன்றெடுத்த திருமதி நாகம்மா வல்லிபுரம் அவர்களின் புகழ் உடம்பு சாகாது.

பெண்களை எப்படி ஒரு தாய் வளர்க்க வேண்டும் என்பதையும், தமிழ்ப் பெண்களின் சக்தி எத்தகையது என்பதையும் உலகுக்கு எடுத்துக்காட்டியவரும், இலங்கைத் தமிழர்களின் போராட்டங்களில் இலை மறை காயைப்போல் இருந்து உதவிபுரிந்த திருமதி நாகம்மா வல்லிபுரம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உடுப்பிட்டித் தொகுதி மக்களினதும், குறிப்பாக நெல்லியடி த. அ. வா. மு. ஆழ்ந்த அனுதாபங்களை ஏற்றுக் கொள்ளுமாறு திருமதி மங்கயர்க்கரசி அமிர்தலிங்கத்தையும், அவரது குடும்பத்தினரையும் தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. ச. வி. நடராஜா அவர்கள்

*செயலாளர்,*

இ. த. அ. க. வட்டுக்கோட்டைக்கிளை

வட்டுக்கோட்டை மாவட்டசபை.

# வாரி வழங்கிய வள்ளல்

திருமதி நாகம்மா பூர்வ புண்ணியம் செய்த தெய்வப் பிறவியாவார். குன்றாத பெருஞ் செல்வம் படைத்த மாதர்குல முதல்வியாய இவர் பழந்தமிழரின் பண்பாட்டிற்கமைய இறுதிவரை ஈகை, இரக்கம், இறைவழிபாடு என்னும் அருங் குணங்கள் வாய்க்கப்பெற்றவராய் விளங்கினர். செல்வச்சிறப்பு இருந்தும் ஆடம்பரமற்ற வாழ்வு வாழ்ந்தார். கணவன் ஈட்டுவது; இவர் ஈவது. இதுவே இவர் வாழ்வின் லட்சியம் ஒருமுறை இவ் வம்மையாருக்கு ஏற்பட்ட வாதநோய் காரணமாக ஒரு கை சோர்வடைந்தபோது, ஒரு பெண் இவர் இல்லத்திற்கு வந்திருந்தார், இவரைப்பார்த்து "அந்த ஆள் உழைப்பதை நீர் அள்ளி அள்ளிக் கொடுத்துத்தான் கையில் சோர்வு வந்தது" என்றாராம் அப் பெண் உடனே நாகம்மையார் "அப்படியானல் மற்றக் கையும் சோர்வடையட்டும்" என்று பதிலடி கொடுத்தாராம்.

"வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்துமன்றி விளைவன யாவையே"

எனக் கம்பன் கண்ட மகளிர் ஒப்ப, யாவருக்கும் இல்லை என்னது அள்ளிக் கொடுத்தார். இதனல் இவர் வாரி வாரி வழங்கிய வள்ளலாகத் திகழ்கின்றார்.

செல்வம் வந்துற்றபோது சுற்றமும் துணையும் தேடமாட்டார் என்ற கருத்து பாரதத்தில் வலியுறுத்தப்படுகிறது. இவரோ அப் புலவர் கருத்தைப் பொய்ப்பித்துவிட்டார். செல்வச் சிறப்பால் உற்றார்பேணி, உறு பொருள் கொடுத்து சுற்றம் தழுவி, நற்றவம் செய்த நங்கையாவர். தமிழ்ப்பெரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் கச்சேரி வாயிலில் அறப்போர் செய்த காலை தன் மகளுக்கும் மருகருக்கும் குறைந்தவர் அல்லர் என்பதை அறப்போர் அணிவகுப்பில் கலந்து தமிழ்ப்பணியாற்றியதன் மூலம் உறுதிப்படுத்தியவர்.

எல்லோர் வாழ்விலும் தாழ்விலும் கலந்து யாவரையும் தம்மவராகப்பேணி வாழ்ந்தவர். எவர் மனதையும் புண் படுத்தா இயல்பினர். இவர் இறைவன் அடி சேர்ந்த பின்னர் நடந்த இறுதிச்சடங்குகளில் இந்நாட்டின் இராஜாங்க அமைச்சர் கௌரவ திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களும் உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ திரு. மு, திருச்செல்வம் அவர்களும் பல நாடாளுமன்ற உறுப்பினர் மேல்சபை உறுப்பினர் ஆய பலர் கலந்துகொண்டமை இவர் தவத்தின் பயன் அன்றோ.

இலங்கைத் தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியின் அரசியல் மாநாட்டிலே இவரின் மறைவை நாடாளுமன்ற உறுப்பினரும் மாநாட்டுத் தலைவரும் ஆகிய திரு. செ. இராஜதுரை அவர்கள் அறிவித்ததும், அங்கு குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் நிலைகுலைந்து தலைதாழ்த் தியமை ஒன்றே மக்கள் உள்ளம் கவர்ந்த மாதலைவி என்ற உண்மைக்குத் தக்கவொரு சான்றாகும்.

இவர் இழப்பு ஈழத் தமிழ்பேசும் இனத்துக்குப் பேரிழப் பாகும். அம்மையார் ஆன்மா சாந்தி அடைக.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்

## அருட்பாக்கள்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே.

பண்டு நால்வருக் கறமுறைத் தருளிப்பல்
லுலகினி லுயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழில்மஞ்ஞை
நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாள்தொறுந் துதிசெய அருள்செய்கே
தீச்சர மதுதானே.

சிறைபாரு மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்
முறையாலேயுணத்தருவன் மொய்பவளத்தோடுதரளந்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் திருநாம மெனக்கொருகாற் பேசாயே.

எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவ ரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டியேன் என்செய் கேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்ருள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னுமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே

திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கண்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
யீசற் காட்செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள
வில்லதோ ரானந்த வெள்ளப் பொருள்
பண்டுமின் றுமென் றுமுள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன்
றிருநடங் கும்பிடப் பெற்ற
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணிலா னந்த வருவிநீர் சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினா னீடி யறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே! சற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

உ

திருச்சிற்றம்பலம்

## சிவபுராணம்

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டது.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடிபோற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன்னடி போற்றி
சீரார் பெருந்துறை நந்தேவனடி போற்றி
ஆராத வின்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்றஅதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயவுரைப்ப னியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து(ம்) மண்ணிறைந்தும்மிக்காய் விளங்கொளி
எண்இறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர் [யாய்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யஎன் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப்பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவு இறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன் பாகிக் கசிந்துள் ளுருகு
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி பலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாம் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லனே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டளிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி லுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருவருட்பா

படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே
பட்டதெல்லாம் போதுமிந்தப் பயந்தீர்த் திப்பொழுதென்
உடலுயிரா தியவெல்லாம் நீயெடுத்துக் கொண்டுன்
உடலுயிரா தியவெல்லா முவந்தெனக்கே யளிப்பாய்
வடலுறுசிற் றம்பலத்தே வாழ்வாயென் கண்ணுண்
மணியேயென் குருமணியே மாணிக்க மணியே
நடனசிகா மணியேயென் னவமணியே ஞான
நன்மணியே பொன்மணியே நடராஜ மணியே.

திருப்புராணம்

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள்சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ இலங்காதேவி அச்சகம், சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org